ජනාධිපති කාර්යාලය

சனாதிபதி அலுவலகம்

PRESIDENTIAL SECRETARIAT

சுற்றாடல் சுற்றறிக்கை - PS/FEA/Circular/4/2026

2026 மே மாதம் 14 ஆம் திகதி

**அமைச்சுக்களின் செயலாளர்கள்**
**மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்**
**திணைக்களத் தலைவர்கள்**
**மாவட்டச் செயலாளர்கள்**
**உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள்**
**அனைத்து அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள்**

**உலக சுற்றாடல் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2026 ஜுன் 05**

ஜுன் மாதம் 05 ஆம் திகதியானது 1972 ஆம் ஆண்டு முதல் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக, காலத்திற்கேற்ற சூழல்சார் தொனிப்பொருள்களின் அடிப்படையில் சூழல் பாதுகாப்பு குறித்து உலக மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கும் உலகளாவிய ரீதியில் எழும் சூழல்சார் பிரச்சினைகள் தொடர்பாக உலகத் தலைவர்களினதும் கொள்கை வகுப்பாளர்களினதும் கவனத்தை ஈர்க்கும் பொருட்டும் ஒரு முக்கிய நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வருடம் ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தினால் உலக சுற்றாடல் தினக் கொண்டாட்டத்தை "Urgent Climate Action" எனும் உலகளாவிய தொனிப்பொருளின் கீழ் 54 ஆவது முறையாக கொண்டாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

02. அதன்படி, 2026 ஜுன் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறும் உலக சுற்றாடல் தினமானது திடீர் காலநிலை நடவடிக்கைகளின் மீது கவனம் செலுத்தி, பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை குறைத்தல், சூழல் முறைமைகளை இயல்பு நிலைக்கு கொண்டுவருதல் மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலையை முகாமை செய்தல் ஆகியவற்றுக்கான உலகளாவிய முயற்சிகளை விரைவுபடுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

03. உலகளாவிய வெப்பநிலை உயர்வின் காரணமாக உருவாகியுள்ள காலநிலை மாற்றமானது தற்போதைய காலத்தில் மனிதகுலம் எதிர்கொள்ளும் முக்கியமான சவாலாக உலக மக்கள் அனைவராலும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இது மனிதச் செயல்பாடுகள் குறிப்பாக சுவட்டு எரிபொருட்களின் எரிப்பின் மூலம் பசுமை இல்ல வாயுக்கள் அதிகளவில் வளிமண்டலத்திற்கு வெளியேற்றப்படுவதன் நேரடி பெறுபேறாகும் என காலநிலை மாற்றம் தொடர்பான பன்னாட்டு அரசுகளின் குழுவினால் (IPCC) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான கட்டமைப்பு உடன்படிக்கை (United Nations Framework Convention on Climate Change) மூலம் வெளியிடப்பட்டுள்ளவாறு, அடுத்த சில தசாப்தங்களில் பசுமை இல்ல வாயு வெளியேற்றம் குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கப்படாவிட்டால், இந்த நூற்றாண்டிற்குள் உலக வெப்பநிலை 2.9°C இனால் உயரக்கூடும் என்றும், அதன் விளைவாக பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, உலகின் அனைத்து அரசுகளும் காலநிலை மாற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டியுள்ளது. மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வளங்களின் பயன்பாடு, வலுசக்தி செயல்திறனை மேம்படுத்துதல், காடு வளர்ப்பு, கழிவுகளை மீள்சுழற்சி செய்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் வலுசக்தி, போக்குவரத்து, விவசாயம், வனவளம் மற்றும் திண்ம கழிவு ஆகிய துறைகளில் ஏற்படும் கார்பன் வெளியேற்றத்தை குறைத்தல் என்பவற்றின் மூலமாக காலநிலை மாற்றத்தினை குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றங்களைத்

தாங்கிக்கொள்ளும் திறன் கொண்ட (climate-resilient) எதிர்காலத்தை நோக்கி நகர்வதும் எதிர்பார்க்கப்படுகிறது.

04. இலங்கையும் காலநிலை மாற்றத்தின் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதுடன், கடுமையான மழைவீழ்ச்சிக்கு பின்னர் ஏற்படும் திடீர் வெள்ளப்பெருக்குகள் மற்றும் மண்சரிவுகள், நீண்டகால வறண்ட காலநிலை காரணமாக உருவாகும் நீர்ப்பற்றாக்குறை போன்ற மிகக் கடுமையான காலநிலை நிலைமைகள் தற்போது சாதாரண நிகழ்வுகளாக மாறியுள்ளன. இந்நிலையை கருத்தில் கொண்டு, இலங்கை நிலைபேறான அபிவிருத்தி கட்டமைப்பின் கீழும், ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான கட்டமைப்பு மாநாட்டின் கோட்பாடுகளுக்கு ஏற்பவும், பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை குறைக்கும் உலகளாவிய முயற்சிக்கு முனைப்பான பங்களிப்பை வழங்கும் முகமாக **“காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைப்பதற்காக செயற்படுவோம்”** என்ற தேசிய தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு, பொதுவாக சூழல் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு இம்முறை உலக சுற்றாடல் தினம் கொண்டாடுகின்றது.

திட்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட தேசிய பேரழிவுக்கு மத்தியில், அரசாங்கத்தால் உயர் நீரேந்து பிரதேச முகாமைத்துவம் மற்றும் நீண்டகால தாங்கும் திறன் கொண்ட நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, மத்திய மலைநாட்டின் உயர் குத்துயர சூழல் அமைப்புகளை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருதல் மற்றும் நிலைபேறான தன்மையை பெறச் செய்தல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகளின் மூலம் எதிர்கால காலநிலை அதிர்வுகளுக்கு எதிராக இயற்கையாகத் தாங்கும் திறன் கொண்ட சூழல் அமைப்புகள் இப்பிரதேசங்களில் உருவாக்கப்படும்.

05. மேற்குறித்த விடயங்களை கருத்தில் கொண்டு, “உலக சுற்றாடல் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம்” என்ற தலைப்பில் 2016 ஏப்ரல் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், உலக சுற்றாடல் தின தேசிய விழாவுக்கு நேரொத்ததாக “தேசிய சுற்றாடல் வாரம்” பிரகடனப்படுத்தப்படுகிறது. அதன்படி, மே 30 ஆம் திகதி முதல் ஜூன் 05 ஆம் திகதி வரையிலான வாரம் “தேசிய சுற்றாடல் வாரம்” ஆக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுடன் அத்தினங்கள் பின்வருமாறு பெயரிடப்பட்டுள்ளன.

மே 30 மனப்பாங்கு மேம்பாட்டின் மூலம் சூழல் பாதுகாப்புக்கு பங்களிக்கும் தினம்

மே 31 சூழல் தூய்மை தொடர்பான அறிவு மற்றும் மனப்பாங்கு மேம்பாட்டுத் தினம்

ஜூன் 01 காலநிலை மாற்றம் மற்றும் வளி மாசுபாட்டின் தாக்கங்கள் குறைக்கப்படுவதை ஊக்குவிக்கும் தினம்

ஜூன் 02 உயிர்ப் பல்வகைமை பாதுகாப்புத் தினம்

ஜூன் 03 நீர் மற்றும் நீர் மூலாதாரங்களை பாதுகாக்கும் தினம்

ஜூன் 04 கரையோர வலயங்களை தூய்மைப்படுத்தல் தினம்

ஜூன் 05 மர நடுகை மற்றும் உலக சுற்றாடல் தினக் கொண்டாட்டம்

06. அதன் பிரகாரம், தேசிய சுற்றாடல் வாரத்தில் அரச நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் துறையினர், பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் பெருந்தோட்டத் துறையினர், அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளின் தலைமையில் மக்களின் பங்கேற்புடன் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

I. காலநிலை மாற்றம் தொடர்பாக அனைத்து தரப்பினர்களையும் விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

II. நீரேந்துப் பிரதேசங்கள், பாதுகாப்புப் பிரதேசங்கள், ஆற்றங் கரைகள், ஈரவலயங்கள் போன்ற சூழல் உணர்திறன்மிக்க நிலப் பகுதிகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றை பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

III. பாதிப்புக்குள்ளான நிலப் பகுதிகளை மீள்நிலைக்கு கொண்டுவருதல், மண் பாதுகாப்பு மற்றும் பேண்தகு காணி முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

IV. உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

V. அரச நிறுவனங்கள் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பயன்பாட்டை நோக்கி நகர்வதை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

VI. நிறுவனங்களுக்குள் வலுசக்தி பயன்பாட்டை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

VII. நாடு முழுவதும் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் வலுசக்தியை வினைத்திறனாக பயன்படுத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

VIII. அலுவலக பெறுகை செயல்முறைகளில், இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் பசுமை உற்பத்திகளை (சூழல் சான்றளிக்கப்பட்ட, பசுமை லேபள் செய்யப்பட்ட) கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை அளித்தல்.

IX. காகித பயன்பாட்டை குறைத்து, அதற்கு மாற்றாக மின்னணு அல்லது டிஜிட்டல் ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

X. நாடு முழுவதும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைமையில் அந்த உள்ளூராட்சி அதிகார எல்லைக்குள் சுற்றாடலைத் தூய்மைப்படுத்தல், அகற்றப்படும் பிளாஸ்ரிக்கை/பொலித்தீனை சேகரித்தல், கழிவுகளை வகைப்படுத்தல் மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தி பேணிச் செல்லல்.

XI. வீட்டில், அலுவலகத்தில் மற்றும் பாடசாலையில் அகற்றப்படும் பிளாஸ்ரிக்கை சேகரித்து அவற்றை கழிவுகளை சேகரிக்கும் மத்தியநிலையங்களுக்கு அனுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்

XII. தங்கள் நிறுவன வளாகங்களில் நடத்தப்படும் கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களின் பயன்பாட்டை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

XIII. கரையோரங்களில் மூடுபயிர் வளர்ப்பினை அதிகரித்தல் மற்றும் கண்டல் தாவரங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

XIV. சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டல்.

XV. சூழல் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் குறித்து விழிப்புணர்வூட்டல்.

07. ஒவ்வொரு நிறுவனத்தினாலும் மேலே உத்தேசிக்கப்பட்டவாறு பொருத்தமான சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய சுற்றாடல் வாரத்தில் முன்னெடுப்பதற்கென முன்னேற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசியல் தலைமைத்துவத்தினதும் பங்கேற்புடன் அவற்றை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

08. அரசாங்கமானது தற்போது நாட்டின் இளைய தலைமுறையை சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதில் கவனம் செலுத்தி வருவதால், இந்த பணிகளில் இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் இளைஞர் மற்றும் யுவதிகளை பங்கேற்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானது என்பதை வலியுறுத்துகின்றேன்.

09. தேசிய சுற்றாடல் வாரத்தினுள் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான மென்பிரதியை pedudivision@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியின் வாயிலாக சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

10. எதிர்வரும் ஆண்டுகளில் தேசிய சுற்றாடல் வாரம் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, அந்நிகழ்ச்சித்திட்டங்களை தமது நிறுவனங்களின், மாவட்டங்களின் அல்லது மாகாணங்களின் வருடாந்த திட்டங்களினுள் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

11. இச்செயற்பாடுகளை முன்னெடுக்கையில் அரசாங்கத்தினால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுமாறும் அறியத்தருகின்றேன்.

சுற்றாடல் நேயம் மிக்க சமூகமொன்றை உருவாக்குதல் பொருட்டு தங்களின் முனைப்பான பங்களிப்பினையும் ஒத்துழைப்பினையும் எதிர்பார்க்கின்றேன்.

**ஒப்பம்/ கலாநிதி என்.எஸ். குமாநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

பிரதிகள்: 01. பிரதம அமைச்சரின் செயலாளர் - தயவுடன் தகவலுக்காக
02. அமைச்சரவைச் செயலாளர் - தயவுடன் தகவலுக்காக